**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2012-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் "**

**பொருள் :** **இறைவனின் அடிகளை இடைவிடாமல் நினைப்பவர், பிறவி யாகிய பெரிய கடலைக் கடப்பர். மற்றவர் கடக்க முடியாமல் அதனுள் அழுந்துவர்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**1) <u>சி.டபிள்யு.2/ 39280/2011</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **16.08.2012**-ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.264</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**2) <u>சி.டபுள்யூ.2/000132/12</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி **25.09.2012**-ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.265**

**பதிவு செய்யப்பட்டது**

**3) B1/027462/12**

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நிதித்துறை அரசு ஆணை எண் :362, நாள் :05.10.12–ன் பிரகாரம் தமிழ்நாடு அரசு ஊழியர்களை போல் 01.07.12 முதல் அகவிலைப்படி 65 சதவிகிதத்திலிருந்து 72 சதவிகிதமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிலுவையை வழங்கி ஆணையிட்ட ஆணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு :** உத்தேச செலவு ரூ.**80.00** இலட்சம்

**மாமன்றத்தீர்மானம் எண்.266**

**பதிவு செய்யப்பட்டது**

**4) ம.வ./028663 /2012**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சுவான்தாரர்களுக்கு வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பிற்குரிய குழாய் கட்டணம் உபயோகத் தன்மை அடிப்படையில் 01.04.2010 முதல் உயர்த்தி வசூலிப்பதற்கு மாமன்ற தீர்மானம் எண் 718 நாள் 30.06.2009ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த குடிநீர் கட்டணம் உயர்வு சம்பந்தமாக குடியிருப்பு நலச் சங்கங்கள் , தொழில் முனைவோர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிடமிருந்து குடிநீர் கட்டணம் உயர்வு அதிகமாக உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி குடிநீர் கட்டண உயர்வை கைவிடும் படி தொலைபேசி வாயிலாகவும் , நேரிலும் கோரிக்கை விடுத்துள்ளனர். குடிநீர் குழாய் கட்டண உயர்வை ரத்து செய்து பழைய குடிநீர் கட்டணத்தை வசூலிக்கும் படி பொது மக்களிடமிருந்து கோரிக்கை வந்த வண்ணம் உள்ளது. இக்கோரிக்கைகள் குறித்து கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 01.04.2010 முதல் உயர்த்தப்பட்ட குடிநீர் குழாய் கட்டணத்தை (2010 -2011 மற்றும் 2011-2012) இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தி வைப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.267**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5) HF1/27487/12**

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் எண்.8-ல் பணிபுரிந்து வரும் திருமதி.M.R.லதா மகேஸ்வரி, நகர சுகாதார செவிலியர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு ஒருவழிப் பணிமாறுதல் செய்யக் கோரி மனு செய்துள்ளதின் பேரில் அவரை பணிமாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. மேற்படி ஒருவழிப் பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்றத்தீர்மானம் எண்.268**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6) RR1/20587/12**

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்டச் சுற்றுச்சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண்: 225, நாள் : 09.06.2000 மற்றும் அரசாணை எண்:149, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 23.10.2000-ன் படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை வழிகாட்டுதல் படி ஒவ்வொரு ஆண்டும் 8% உயர்வு செய்து மாநகராட்சி மாமன்ற அனுமதியுடன் சுங்க கட்டணம் வசூல் செய்வதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

01.11.2012 முதல் 31.10.2013 முடிய உள்வட்டச்சுற்றுசாலையில் செல்லும் வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்து வரும் கட்டணத்தில் 8% உயர்வு செய்யலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்: 149, நாள் : 23.10.2000 பத்தி (எ)–ல் உள்ளபடி 5 ஆண்டுகள் முடிந்த பின்னர் ஒவ்வொரு ஆண்டிற்கும் 8% உயர்வு செய்யும் முறையை ஏற்கலாம்.

2. மேற்படி அரசாணை 10 (இ)—ல் கடனுக்காக வசூல் செய்யும் சுங்க கட்டணம் வருடாந்திர உயர்வு 8% -ஐ தொடரலாம்.
3. ரூ.5,10,15 அந்தந்த சுங்கச் சாவடிகளின் ஆரம்பம் முதல் முடிவு வரை உள்ள பகுதிக்கு உரிய சுங்க கட்டணமாகும். மேற்படி தொகைக்கு 8% உயர்வு கடந்த 7 ஆண்டுகளாக உயர்வு வழங்கப்படவில்லை. எனவே சில்லரை வழங்குவதில் ஏற்படும் பிரச்சனையை சமன் செய்யும் வகையில் சந்தை நிலவரப்படி (Round Figure) ரூ.10,15,20 ஆக நிர்ணயம் செய்யலாம்.
4. தற்போதுள்ள சுங்க கட்டண விகிதங்கள் 8% உயர்வு செய்யப்பட்ட கட்டண விகிதமும் கோப்பில் புத்தக வடிவில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.269**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7) ம.பொ.4/005356/12**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு 50-ல் கீழநாப்பாளையம் தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் ஏற்கனவே உள்ள கடைகள் நீங்கலாக மீதமுள்ள காலியிடத்தில் 10' x 15' என்ற அளவில் இரண்டு கடைகள் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீட்டு தொகையாக ரூ.5.00-லட்சம் ஆகும்.

மேற்கண்ட மதிப்பீட்டு தொகையான ரூ.5.00-லட்சம் திரும்ப பெறப்படாத தொகையாக நிர்ணயம் செய்து முன்னதாக உரிய முறையில் பகிரங்க ஏலம் விட நடவடிக்கை எடுக்கவும், உத்தேச மதிப்பீட்டு தொகை ஒப்புதலுக்காகவும் வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.270**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) ம3/எ11/007625/12**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 58, சிந்தாமணி பிள்ளையார் கோவில் கலையரங்கம் அருகில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து அருகில் இருப்பவர்கள் உயிருக்கும் உடைமைக்கும் அபாயம் விளைவிப்பதாக உள்ளதால், மேற்கண்ட நீர்த்தேக்கத் தொட்டியினை எடுத்து அகற்ற மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.271**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9) மதி1/19393/99**

மதுரை மாநகராட்சியுடன் தற்போது புதிதாக 3 நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 11 கிராம பஞ்சாயத்துகள் 25.10.2011 முதல் இணைக்கப்பட்டு தற்போது மதுரை மாநகராட்சி பரப்பளவு 51.8 சதுர கிலோ மீட்டரிலிருந்து 147.987 சதுர கிலோமீட்டர் ஆக விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சியில் நிலையில் உள்ள 72 வார்டுகள் 100 வார்டுகளாக உயர்த்தப்பட்டு 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் ஏற்கனவே ஐந்து நகரளவர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர். ஆனால் தற்போது இரண்டு நகரளவர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் தற்போதுள்ள இரண்டு நகரளவர்களால் ஆக்கிரமிப்பு சம்பந்தப்பட்ட பணிகள், அரசுக்கு சொந்தமான இடங்களில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள், ஆக்கிரமிப்புகள் தொடர்பாக வரப்பெறும் மனுக்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கவும் மற்றும் 100 வார்டுகளுக்கான இதர பணிகளை உரிய நேரத்தில் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் மேற்கண்ட பணிகளை உடன் நடவடிக்கை மேற்கொள்ள கூடுதலாக நகரளவர்கள் பணியிடம் தேவைப்படுகிறது.

எனவே தற்போது பணிபுரிந்து வரும் இரண்டு நகரளவருடன் சேர்த்து கூடுதலாக 3 நகரளவர் பணியிடங்களை மதுரை மாநகராட்சிக்கு (அயர்பணியில்) ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்க ஆணையர், நில அளவை மற்றும் நிலவரி திட்டம் (Commissioner of Survey and Land Records) அவர்களை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.272**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**10) ம.1.நி.1/010998/2012**

மதுரை மாநகராட்சியின் மண்டலம் 1-ல் பணிபுரியும் திரு.ஜெ.சுரேஷ்குமார் 04.06.2001 முதல் உதவி பொறியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். உதவிப்பொறியாளர் பணியிடத்தில் குற்றச்சாட்டு நடவடிக்கை நிலுவையில் இல்லை, நிதியிழப்பு இல்லை, தணிக்கைத் தடைகள் நிலுவையில் இல்லை, சம்பளமில்லா விடுப்பு எதுவும் எடுக்கவில்லை. மேலும் இலாகா தேர்வு 31.12.2005-ல் தேர்ச்சி பெற்றுள்ளார்.

எனவே, திரு.ஜெ.சுரேஷ்குமார், உதவி பொறியாளர் பணியிடத்தில் 04.06.2001 முதல் பணியினை ஒழுங்குபடுத்தவும், 03.06.2003-ல் பயிற்சிக் காலத்தினை திருப்திகரமாக முடித்துள்ளார் என அறிவிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.273**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11) ம.பொ. 4/ம.எண். 559 / 12-13**

மதுரை மநகராட்சியுன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள வார்டுப் பகுதிகளில் குடிநீர் மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேற்கொள்ள தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தின் போது மேற்படி பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்திரவிட்டுள்ளார். அதனடிப்படையில் முதற்கட்டமாக மேற்படி பகுதிகள் மற்றும் மாநகராட்சியின் பழைய வார்டுப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் தொட்டிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, கடந்த 30.08.2012– அன்று மாமன்ற கூட்டத்தில் (மாமன்ற தீர்மான எண்.246,), ஒப்புதல் பெறப்பட்டு 04.10.2012 – அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் | விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| **1.** | **மபொ. 4/ம.எண். 559/12-13**<br>மண்டலம் 1-க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **38.50** | **M/s.ஜெய்வர்சினி டிரான்ஸ்போர்ட்** | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 3.06% கூடுதல் |
| **2.** | **மபொ. 4/ம.எண். 560/12-13**<br>மண்டலம் 2–க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **59.50** | | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 2.94% கூடுதல் |
| **3.** | **மபொ. 4/ம.எண். 561/12-13**<br>மண்டலம் 3–க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **38.50** | | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 3.06% கூடுதல் |
| **4.** | **மபொ. 4/ம.எண். 562/12-13**<br>மண்டலம் 4-க்குட்பட்ட பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | **59.50** | | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 2.94% கூடுதல் |

மேற்கண்டவாறு ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ள விலை விகிதம் மதிப்பீட்டு விலை விகிததத்திற்கு கூடுதலாக இருந்தாலும் மதிப்பீட்டு தொகைக்குள் அடங்குவதால் அன்னாரின் விலை விகிதத்தினை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு M/s.ஜெய்வர்சினி டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.274**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12) மபொ.4/11221/2012**

மதுரை மாநகராட்சியில் "ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் தெருவிளக்குகள் அமைப்பதற்கு ரூ.19.15 கோடிக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையாளரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 2011-12–ம் நிதியாண்டில் ரூ.10.00 கோடியும் 2012-13–ம் நிதியாண்டில் ரூ.4.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகையில் மீதமுள்ள தொகையினை வரும் நிதியாண்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரகத்தை கேட்டுக் கொள்ளவும் இத்திட்டத்தை PPP Mode (ESCO முறையில்) நடைமுறைப்படுத்துவதற்கு உரிய மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.275**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13)** **<u>ம.பொ.4/ம.எண்.22(IUDM)/2011-2012</u>**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு " ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் –2012" –ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.40.13-கோடிக்கு வரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும், கடந்த 30.01.2012 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண்.101, நாள் :30.01.2012) ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டு (ந.க.எண்.47923/2011/இ3, நாள் :01.02.2012) நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.10–கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட பணிகளில் கீழ்கண்ட மூன்று பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளி முதலாவது அழைப்பில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தினால் விலைப்புள்ளிகள் நிராகரிக்கப்பட்டு, இரண்டாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளி வரைவழைக்கப்பட்டது. அவ்வாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | மதிப்பீட்டு விபரம் | M/s.TATA Motors Ltd., | | M/s.Ashok Leyland Liited Motors Ltd., | |
|---|---|---|---|---|---|
| | | Chassis Rate | Hydraulic & Dumber placer body building work | Chassis Rate | Hydraulic & Dumber placer body building work |
| 1 | ம.பொ.4/ம.எண்.22/11-12 டம்பர் பிளேசர் வாகனம் – 17 எண்ணம் | **Rs.9,45,992/-** | **Rs.5,99,445/-** | **Rs.9,58,000/-** | **Rs.6,23,000/-** |
| 2 | ம.பொ.4/ம.எண்.23/11-12 டம்பர் பிளேசர் வாகனம் – 17 எண்ணம் | **Total :-** | **Rs.15,45,437/-** | **Total :-** | **Rs.15,81,000/-** |
| 3 | ம.பொ.4/ம.எண்.24/11-12 டம்பர் பிளேசர் வாகனம் – 16 எண்ணம் | | | | |

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக ஆய்வுக்கூட்டத்தில் மேற்கண்ட வாகனத்தின் விலை விபரங்கள் தரவிலை அட்டவணைக்கு (Schedule of Rate ) உட்படாததால், மதுரை மாநகராட்சியே ஒப்பந்தப்புள்ளியை பரிசீலித்து வேலை உத்தரவு வழங்க வேலை உத்தரவு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

எனவே, மேற்கண்ட கம்பெனிதாரர்களில் M/s.TATA Motors Ltd., அவர்களின் விலைவிகிதம் குறைவாக உள்ளது. சிறப்பு அரசு விலை விகிதத்தின்படி (Special Government Price) வாகன தயாரிப்பு நிறுவனம் M/s.TATA Motors Ltd., வாகனத்திற்கான சேஸிஸ் (Chassis) விலையை டெண்டரில் வழங்கியுள்ளது.

இவ்விலைவிகிதத்தை காட்டிலும் குறைவான விலையில் தயாரிப்பாளர்களோ, அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களோ வாகன சேஸிஸ்ஸை (Chassis) வழங்க இயலாத சூழ்நிலைய கருத்தில் கொண்டு சிறப்பு அரசு விலை விகதத்தின்படி, L1, நிறுவனம் M/s.TATA Motors Ltd., அவர்கள் விலை விகிதத்தினை ஏற்கவும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடுசெய்யவும் மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.276</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 31.10.2012**

* * * * * * * *

# மதுரை மாநகராட்சி
# மாமன்றக் கூட்டம்
# Table Agenda

**1) ம.ந.2/28787/2012**

மதுரை மாநகரில் மையப்பகுதியில் இராஜாஜி மருத்துவமனை அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையில் மதுரையில் சுற்றி உள்ள 4 மாவட்டங்களில் உள்ள பொது மக்கள் பயன்அடைந்து வருகிறார்கள். தற்பொழுது டெங்கு காய்ச்சல், மற்றும் வைரஸ் காய்ச்சல் நோயாளிகள் அதிகம் பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இதனால் மருத்துவமனைக்கு நோயாளிகள் மற்றும் உறவினர்கள் அதிக நபர்கள் வருவதால் தினசரி குப்பைகள் அதிகம் சேருகிறது. தற்பொழுது மருத்துவமனையில் உள்ள துப்புரவு பணியாளர்கள் குறைவாக உள்ளதால் அன்றாடம் சேரும் குப்பைகள் மருத்துவமனையில் சேகரித்து குப்பை சேகரிக்கும் இடத்தில் சேர்க்க இயலவில்லை. இதனால் பொது மக்களுக்கு நோய் பரவும் நிலையில் உள்ளது. இராஜாஜி மருத்துவமனை நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இதனை தடுக்க மருத்துவமனை கட்டிடத்தின் வெளியில் சேரும் குப்பைகளை தினசரி சேகரிக்க, மதுரை மாநகராட்சி சார்பாக 10 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து இராஜாஜி மருத்துவமனையில் சேரும் அனைத்து குப்பைகளை தினசரி அகற்றும் பணி செய்யலாம். தற்காலிகமாக மதுரை மாநகராட்சி சார்பாக 10 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.277**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2) மநி.1/28483/12**

மதுரை மாநகராட்சி பொது விதிகள் 1996–ன்படி மதுரை மாநகராட்சி வழக்கினங்களை கையாளுவதற்கும் உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்ற வழக்குகளை தொடர் நடவடிக்கை எடுக்கவும், மதுரை மாநகராட்சிக்கு சட்ட அலுவலர் பணியிடம் வகுப்பு II பணியிடத்தில் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் தற்போது கண்காணிப்பாளராக பணியாற்றும் பணியாளர்களில் சட்டப்படிப்பு படித்தவர்கள் யாரும் இல்லை. கடந்த ஐந்தாண்டுகளாக மதுரை மாநகராட்சி சட்ட அலுவலர் பணியிடத்திற்கு அயற்பணியில் யாரும் பணியேற்க வரவில்லை. தற்பொழுது சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் சுமார் 4000 வழக்குகள் மாநகராட்சிக்கு எதிராக நிலுவையாக உள்ளன. பல வழக்குகளில் மாநகராட்சிக்கு பாதகமாக தீர்ப்புகள் வழங்கப்படுகிறது. மாநகராட்சி நிலைக்குழு (Standing Council) வழக்கறிஞர்களுக்கு அன்றாடம் உரியத் தகவல் தெரிவிக்க இயலாத நிலை உள்ளதாலும் மற்றும் உரிய நேரத்தில் எதிர்வாதுரை தயார் செய்ய இயலாத காரணத்தினாலும், உரிய சட்ட அலுவலர் பணியிடம் காலியாக இருப்பதனால் வழக்கினங்களில் சுணக்கம் ஏற்படும் நிலையில் உள்ளது.

எனவே சென்னை உயர்நீமன்றம் மதுரைக்கிளையில் பதிவு செய்யப்பட்ட ஒரு வழக்கறிஞரை முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதியத்தின் அடிப்படையில் மதுரை மாநகராட்சி சட்ட அலுவலர் பணியிடத்தில் மாத தொகுப்பூதிய தொகை ரூ.20,000/- நிர்ணயம் செய்து உரிய நபரை நியமனம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.278**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3) ம.பொ. 4/ம.எண். 418 / 12-13**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட உள்வட்டச் சுற்றுச் சாலையில் உள்ள டோல்கேட் எண்.2 முதல் 5 வரையுள்ள டோல்கேட்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட டோல்கேட்டின் மேற்கூரையின் Structural Steel Canopy அமைத்து அவற்றிற்கு Roofing மற்றும் False Ceiling அமைத்து பணிகள் மேற்கொள்ளும் வகையில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் (மாமன்ற தீர்மானம்

எண். 245, நாள். 30.08.2012) பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 1. | **ம.பொ. 4/ம.எண்.** 418/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 2ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 | M/s. Gowri Construction | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.95% அதிகம் |
| 2. | **ம.பொ. 4/ம.எண்.** 441/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 3ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 | M/s. Sri Aishwarya Construction | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.95% அதிகம் |
| 3. | **ம.பொ. 4/ம.எண்.** 442/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 4ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 99.90 | M/s. Sri Aishwarya Construction | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.95% அதிகம் |
| 4. | **ம.பொ. 4/ம.எண்.** 623/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 5ல் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 34.00 | திரு. கொடியரசு | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.279**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4) ம.பொ. 3/ம.எண். 806 / 12-13**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட உள்வட்டச் சுற்றுச் சாலையில் உள்ள டோல்கேட் எண்.1 முதல் 5 வரையுள்ள சாலைகளில் தடுப்புச்சுவர் அமைத்து தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு இணையாக சாலைகளை அகலப்படுத்தி தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் (மாமன்ற தீர்மானம் எண். 254, நாள். 27.09.12) ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 1. | **ம.பொ. 4/ம.எண்.** 802/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 2ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 80.64 | திரு.T.A.G. காமராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 3% அதிகம் |
| 2. | **ம.பொ. 4/ம.எண்.** 803/12-13<br>உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 2ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 80.64 | திரு.T.A.G. காமராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 3% அதிகம் |

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 3. | **ம.பொ. 3/ம.எண்.** 806/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 3ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 82.74 | திரு.J. சௌந்திர பாண்டியன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 2.97% அதிகம் |
| 4. | **ம.பொ. 3/ம.எண்.** 807/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 3ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 82.74 | திரு.J. சௌந்திர பாண்டியன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 2.97% அதிகம் |
| 5. | **ம.பொ. 3/ம.எண்.** 808/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 4ல் கிழக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 80.64 | திரு.M. அருள்ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 2.99% அதிகம் |
| 6. | **ம.பொ. 3/ம.எண்.** 809/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 4ல் மேற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 80.64 | திரு.M. அருள்ராஜ் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 3% அதிகம் |
| 7. | **ம.பொ. 4/ம.எண்.** 452/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 5ல் வடக்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 97.90 | M/s. Sri Kamatchi Engineering Contractor | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 1% அதிகம் |
| 8. | **ம.பொ. 4/ம.எண்.** 451/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 5ல் தெற்கு பக்கம் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 97.90 | M/s. Sri Kamatchi Engineering Contractor | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 1% அதிகம் |
| 9. | **ம.பொ. 4/ம.எண்.** 872/12-13 உள்வட்ட சுற்றுச்சாலை டோல்கேட் எண். 1ல் தடுப்புச்சுவர் அமைத்து சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 90.00 | திரு.N. மணிவண்ண ன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 3% அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.280</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**5) <u>ம.பொ.4/000482/12</u>**

மதுரை மாநகராட்சியில் 1971–ம் ஆண்டு 433(9) விதியின் கீழ் தமிழ்நாடு தொழிற்பயிற்சி மையத்தில் பிளம்பர் சான்றிதழ் பெற்று பின் மாநகராட்சி உரிமம் பெற்ற பிளம்பர்கள் மூலம் புதிதாக குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு பணிகளை மேற்கொள்வது வழக்கமாக இருந்து வந்தது. மேலும் அன்னார்களுக்கு ஆண்டுத்தோறும் பிளம்பர் உரிமம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பின்னர் பல்வேறு அலுவலக நடவடிக்கையின் காரணமாக பிளம்பர் உரிமம் புதுப்பிக்கப்படாமல் தற்போது வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போதிய முன் அனுபவம் இல்லாத தனியார் பணியாளர்களைக் கொண்டும், இடைத்தரகர்கள் மூலமாகவும் புதிய குடிநீர் குழாய் இணைப்பு மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு மாநகராட்சியின் முறையான அனுமிதியின்றி மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பல்வேறு பகுதிகளில் குடிநீர் குழாய் மற்றும் பாதாளச் சாக்கடை பிரதானக்

குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது குடிநீரில் கழிவுநீர் கலந்து வருகின்றது. மேலும் மாநகராட்சிக்குட்பட்ட சாலைப் பகுதிகளும் அதிகளவில் சேதப்படுத்தப்பட்டு போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் மிகவும் இடையூறாக உள்ளதால் மாநகராட்சிக்கு அவப்பெயர் மற்றும் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. எனவே இதனை தவிர்க்கும் பொருட்டு மாநகராட்சி பதிவு பெற்ற பிளம்பர்களின் மனுவில் கோரியுள்ளவாறு, அன்னார்களின் பிளம்பர் உரிமத்தினை கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் புதுப்பித்துக் கொள்ள வழி வகை செய்யலாம். அதன் விபரம் பின்வருமாறு:

**<u>நிபந்தனைகள் :</u>**

1) மாநகராட்சி குழாய் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு விதிமுறை மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட உபவிதிகளின்படி குழாய் இணைப்பு மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும்.
2) பிளம்பர்கள் தங்களது வேலைகளை தாங்களே முன்னின்று செய்ய வேண்டும். எக்காரணத்தினை கொண்டும் வேறு நபர்களைக் கொண்டோ அல்லது முகவர் மூலமாகவோ செய்யக் கூடாது.
3) பிளம்பர்கள் தனியார் அல்லது வேறு நிறுவனங்களில் பணியாற்றக் கூடாது.
4) பிளம்பர் உரிமக் கட்டணம் வைப்புத் தொகை ரூ.50,000 ஆகும்.
5) பிளம்பர்களின் உரிமம் வழங்கப்பட்ட நாள் முதல் ஓராண்டு மட்டும் செல்லத்தக்கதாகும். மேலும் கால நீட்டிப்பு செய்யும் பட்சத்தில் நிர்ணயிக்கப்படும் நீட்டிப்பு தொகையினை செலுத்தி உரிமத்தினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
6) குழாய் இணைப்பு மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு மதிப்பீட்டின்படி தான் பணி செய்யப்பட வேண்டும். மாறுதல் இருப்பதாக தெரிய வரும் பட்சத்தில் அதற்கான கூடுதல் கட்டணத்தை சம்பந்தப்பட்ட வார்டு பொறியாளரின் அறிவுரையின்படி உடன் செலுத்த வேண்டும். இல்லையெனில் உடனடியாகப் பிளம்பர் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.
7) பிளம்பர்கள் செய்யும் பணிகளின் விபரத்தினை கையேடு வைத்து பராமரிக்கப்பட வேண்டும். வாரம் ஒரு முறை இளநிலை / உதவிப் பொறியாளர்களின் கையொப்பம் மற்றும் மாதம் ஒரு முறை சம்பந்தப்பட்ட மண்டல உதவி நிர்வாகப் பொறியாளர் மற்றும் நிர்வாகப் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். மேற்காணும் கையேட்டினை வருடத்தின் கடைசியில் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
8) இணைப்பு பணி மேற்கொள்ளும் சாலைப் பகுதியினை தோண்டுவதற்கு மாநகராட்சியில் சாலை தோண்டுவதற்கான கட்டணத்தினை முறையாக செலுத்தி மாநகராட்சியின் உரிய அனுமதி பெற்ற பின்னர் தான் சாலையினை தோண்ட வேண்டும்.

மேற்கண்டவாறு மாநகராட்சி விதி எண். 433 (9)-ன்படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு பணிகளை மாநகராட்சி பதிவு பெற்ற பிளம்பர்களைக் கொண்டு மேற்கொள்ளவும் அன்னார்களின் உரிமத்தினை புதுப்பித்துக் கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.281</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>**

**6) <u>ம.பொ.3/ ம.எண். 1512 / 12-13</u>**

மதுரை மாநகராட்சியில் பொதுமக்களின் அத்தியாவசியப் பணிகளான குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள், குடிநீர் மற்றும் கழிவுநீரேற்று நிலையங்களில் பராமரிப்பு பணிகள் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்களிடமிருந்து சப்ளை பெறப்பட்டு நான்கு மண்டலங்கள் மற்றும் மைய அலுவலகங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மேற்படி பணியாளர்களின் சப்ளை உத்திரவு காலம் வரும் 31.10.2012 உடன் நிறைவடைவதால் நடப்பாண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைத்து சப்ளை பெற வேண்டியுள்ளது. மேற்படி பணியாளர்களை சப்ளை பெறுவதற்கு நடப்பாண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு (விபரம் இணைக்கப்பட்டுள்ளது):

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | **ம.பொ. / ம.எண் . /12-13**<br>மண்டலம் 1–க்கு தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் | **196.40** |
| 2. | **ம.பொ. / ம.எண். /12-13**<br>மண்டலம் 2-க்கு தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் | **221.25** |

| | | |
|---|---|---|
| **3.** | **ம.பொ. / ம.எண். /12-13**<br>மண்டலம் 3–க்கு தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் | **262.57** |
| **4.** | **ம.பொ. / ம.எண். /12-13**<br>மண்டலம் 4- க்கு தேவையான தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் | **219.45** |
| | **மொத்தம்** | **902.67** |

மேற்கண்டவாறு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் பெறுவதற்கான மதிப்பீட்டு பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்க வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.282**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7) B15/028647/12**

மதுரை மாநகராட்சி மையக் கணக்குப்பிரிவின் அவசர அத்தியாவசிய தேவைகளுக்கு ஏற்படும் சில்லறை செலவினங்களுக்கு (பேப்பர், பிரிண்டர் டோனர் மற்றும் Computer உதிரி பாகங்களில் ஏற்படும் கோளாறுகள் சரிசெய்யும் செலவினம்) அவ்வப்போது பணம் தேவைப்படுகிறது. இதற்கான சாதல்லார் (Imprest Amount) தொகை கணக்கினை கணக்கு அலுவலர் (பொது) அவர்கள் பெயரில் ரூ.**5000,–** (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) தோற்றுவிக்கவும், அவ்வப்போது தொகையினை மீளப்பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.283**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8) ம.பொ. 4/ம.எண். 300 / 12-13**

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையின் பெயர் மற்றும் விபரங்கள் அடங்கிய இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் (மாமன்றத்தின் தீர்மானம் எண்.243, நாள். 30.08.2012) பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 1. | **ம.பொ. 4/ம.எண்.** 300 /12-13<br>மண்டலம் 2க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 99.90 | M/s. Teco Asphalt | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 2. | **ம.பொ. 4/ம.எண்.** 624 /12-13<br>மண்டலம் 3க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 90.00 | M/s. Teco Asphalt | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 3. | **ம.பொ. 3/ம.எண்.** 333 /12-13<br>மண்டலம் 1க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 90.00 | M/s. Teco Asphalt | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |
| 4. | **ம.பொ. 4/ம.எண்.** 620 /12-13<br>மண்டலம் 4க்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் ஒளிரும் பெயர் பலகைகள் அமைத்தல் | 99.50 | M/s. Teco Asphalt | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.284**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 31.10.2012**

**தீர்மானம்–1**

கடந்த 15 ஆண்டு காலம் சீர்கெட்டு கிடந்த மதுரை மாநகராட்சியை மீட்டு சட்டமன்ற மானிய கோரிக்கையில் மதுரை மாநகராட்சி வளர்ச்சிக்காக பல்வேறு நிதியை வாரி வழங்கியும் மதுரை மக்களின் அடிப்படை பிரச்சனைகளான சாலை வசதி குடிநீர் வசதி பாதாள சாக்கடை வசதி போன்றவற்றை சீர் செய்தும் கடந்த ஒரே ஆண்டில் மதுரை மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்த்திட வழிவகுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களை இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவிப்பதோடு இந்நன்னாளில் தமிழகத்தின் முதன்மை மாநகராட்சியாக மதுரையை மாற்றிக்காட்டிட நாம் இன்று முதல் உறுதியேற்போம்.

**மாமன்றத்தீர்மானம் எண்.261**

**தீர்மானம் – 2**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான வரலாற்று சிறப்பு மிக்க திட்டமான நாட்டின் வருங்கால தூண்கள் இளைய சமுதாயத்திற்கு நல் ஒழுக்கத்துடன் கூடிய புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரையுள்ள இளைஞர்கள் ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப 50,000 பேர்கள் வரை தேர்ந்தெடுக்கப்பட்டு போக்குவரத்தை ஒழுங்குப்படுத்துதல், நீதிமன்றங்களால் வெளியிடப்படும் வருவிப்பு ஆணைகளை சார்பு செய்தல், கூட்ட நெரிசலை ஒழுங்குப்படுத்துதல், இரவு ரோந்து மற்றும் ஓட்டுனர் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தி மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக 7500 ரூபாயையும், சிறப்பு சலுகைகளும் மற்றும் அவர்களுக்கு 40 வயதிற்கு மேல் நிரந்தர அரசு வேலைவாய்ப்பிற்கான தகுதியையும் வழங்கிடும் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை என்ற சிறப்புமிக்க திட்டத்தை வகுத்து இளைஞர்களுக்கு மிகச்சிறந்த எதிர்காலத்தை உருவாக்கி தந்திட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.262**

**தீர்மானம் – 3**

1991-1996, 2001-2006 ஆகிய காலங்களில், மின் மிகை மாநிலமாக இருந்த தமிழகத்தை, தன் சுய லாபத்திற்காக, எந்த மின் உற்பத்தியும் செய்யாமல், தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கி, அதன்மூலம் தமிழக அரசின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ரூ.40,375 கோடி கடன் சுமையை மின்சார வாரியத்திற்கு வைத்துவிட்டு தமிழக மக்களை இருளில் மூழ்க காரணமாக இருந்த கருணாநிதியை கண்டிப்பதோடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் மின் பற்றாக்குறையை போக்க மத்திய அரசிடம் 1000 மெகாவாட்டை பலமுறை கேட்டும், தமிழகத்திற்கு தராமல் மாற்றான் தாய்போல் தமிழக மக்களை வஞ்சிக்கும் மத்திய அரசையும், இதற்கு ஆதரவாக செயல்பட்டுவரும் தி.மு.க.வையும் இம்மாமன்ற கூட்டம் கடுமையாக

கண்டிப்பதோடு, தமிழகத்தின் மின்வெட்டை தடுத்திட கூடுதல் மின்பகிர்மானத்தை பெற்றுத் தந்திட மத்திய அரசுமீது உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும் தமிழகத்தை இருள் சூழ்ந்த நிலையில் இருந்து மீட்டு எடுத்து, ஒளிமயமான தமிழ்நாட்டை உருவாக்கி மிக விரைவில் தமிழ்நாட்டு மக்களின் மின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, 2013-ம் ஆண்டிற்குள் முற்றிலும் மின்தட்டுப்பாட்டை போக்கி மின் உற்பத்தியில் உபரி மாநிலமாக தமிழகத்தை மறுபடியும் திகழ்த்தி காட்டுவேன் என்று சபதம் எடுத்து அதற்காக போர்கால நடவடிக்கை எடுத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களை இம்மாமன்ற கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.263</u>**